## படிவம் – 8
## உயர் அழுத்த இசைவுப் பத்திரப் படிவம்
## (பார்க்க, விதித்தொகுப்புத் தொடர் 33 (1) )

இந்த இசைவுப் பத்திரம், இரண்டாயிரத்து ...................... ஆம் ஆண்டு .................. மாத ............ ஆம் தேதியன்று ........................ பகுதியில் மின் பகிர்வு செய்யும் .......................... என்ற (உரிமதாரர் பெயர்) என்ற நிறுவன அமைப்பு, இனி உரிமதாரர் எனக் குறிப்பிடப்படுபவர் (இந்தச் சொல், அவரது சட்டப்படியான சார்பாளர்களையும் அவரால் அமர்த்தப் படுபவர்களையும் உள்ளடக்கும்) என்ற தரப்புக்கும், மற்றும் திரு / திருமதி ........................ இனி நுகர்வோர் எனக் குறிப்பிடப்படுபவர், (இச்சொல் அவரது சட்டப்படியான பின் உரிமைதாரர்களையும் அவரால் அமர்த்தப்படுபவர்களையும் உள்ளடக்கும்) என்ற மறுதரப்புக்கும் இடையில் செய்துக் கொள்ளப்படுகிறது.

இங்குக் குறிப்பிடப்பட வேண்டுவதாவது, நுகர்வோர் உரிமதாரரிடம் ........... கிவோ ஆ பெரும மின் தேவையுள்ள மின் ஆற்றலை உஅ/அஉஅ மின்னழுத்தத்தில் விளக்குகளுக்காகவும் மின் திறன் பயன்பாட்டுக்காகவும் வழங்கும்படி கேட்டுக் கொள்ள, உரிமதாரர் அத்தகைய மின் வழங்கலை நுகர்வோருக்கு ................... என்ற கடிதத்தில் ........ ஆம் தேதியன்று, பகிர்மான விதித்தொகுப்பு, மின்வழங்கல் விதித்தொகுப்பு, மின் கட்டமைப்பு விதித்தொகுப்பு ஆகியவற்றின் பயன்படத்தக்க உரிய விதிமுறைகள் மற்றும் வரையறைகளின்படியும் அவற்றில் இனிவரும் உள்ளடக்கங்களின்படியும் தர ஒப்புக்கொள்ள, மேலும் அதன்படி நுகர்வோர் ............ ஆம் தேதியில் மின் வழங்கலைப் பெற்றுக் கொண்டார் என்பதாகும்.

இங்குக் குறிப்பிடப்பட வேண்டுவதாவது .............. கிவோஆ கூடுதல் சுமை பார்வை எண் ..................... என்ற கடிதத்தில் ஒப்பளிக்கப்பட, ஆக அனைத்து மொத்தப் பெரும மின் தேவை ................... கிவோஆ ஆகிறது. மேலும் இங்குக் குறிப்பிடப்பட வேண்டுவதாவது, நுகர்வோர் .................. ஆம் தேதியன்று உரிமதாரருடன் இசைவுப் பத்திரம் செய்துக் கொள்ள உறுதியேற்பும் தந்துள்ளார். எனவே, இப்போது இசைவுடன் பின்வருவன அறிவிக்கப்படுகின்றன.

**1. சுமையின் பெரும மின் தேவை**

இதற்குப் பிறகு உள்ள விதிவகுப்புகளுக்கு உட்பட்டபடி .................. கிவோ ஆ அளவினும் மிகாத பெரும மின்தேவையுள்ள மின் ஆற்றலை உரிமதாரர் தர நுகர்வோர் பெற்றுக் கொள்ள வேண்டும். இது மேற்குறியிட்ட ................. இடத்தமைந்த தொழிலகம், ஆலையின் இருப்பிடத்தில், முற்றிலும் மேற்சொன்ன நோக்கத்துக்காக மட்டுமே பயன்படுத்த, ஒப்பந்தம் செய்துக் கொள்ளப்பட்ட மின் தேவையாகும். இணைக்கப்பட்ட சுமை .................. கிவோஆ / கிவா / பதி .................பெரும மின் தேவை இவற்றில் மாற்றம் ஏதும் செய்யக்கூடாது.

**2. இசைவுப்பத்திரம் நடப்புக்கு வரும் தேதி**

மின் ஆற்றலை தர ஆயத்தமென உரிமதாரர் நுகர்வோருக்கு எழுத்து மூலமான தகவல் தந்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், இந்த இசைவுப் பத்திரத்தின்

கட்டுத்திட்டங்களுக்குக் கட்டுப்பட்டு, உரிமதாரரிடமிருந்து நுகர்வோர் மின் ஆற்றலை எடுத்துக் கொள்ள தொடங்க வேண்டும். இந்த இசைவுப் பத்திரம், மின் ஆற்றல் வழங்கத் தொடங்கிய தேதி, அல்லது மின் வழங்கல் கிடைக்க ஆயத்தமென, முதல் மூன்றுமாத அறிவிப்பு தந்த தேதி இவற்றில் எது முந்தையதோ அன்றிலிருந்து நடப்புக்கு வந்ததாகக் கருதப்படும்.

**3. மின் ஆற்றலின் மறு விற்பனை**

உரிமதாரரின் எழுத்துமூலமான ஒப்பளிப்பு ஏதுமின்றி, இந்த இசைவுப் பத்திரத்தின் மூலம் பெற்ற மின் ஆற்றலை நுகர்வோர் விற்பனை செய்யக்கூடாது.

**4. பகிர்மான விதித்தொகுப்பு மற்றும் மின் வழங்கல் விதித்தொகுப்பு ஆகியவற்றின் விதி வகுப்புகளையும் கட்டுத் திட்டங்களையும் சட்டத்தின் தேவைகளையும் கடைப்பிடித்தல்.**

பயன்படுத்தற்குரிய சட்டங்கள் ஒழுங்குமுறைவிதிகள் போன்றவற்றின் அனைத்துத் தேவைகளையும் மின் கட்டமைப்பு விதித் தொகுப்பு, பகிர்மான விதித்தொகுப்பு, மின் வழங்கல் விதித்தொகுப்பு ஆகியவற்றையும் மேலும் அவற்றுக்கான மாற்றங்கள், திருத்தங்கள் தொடர்பான மறு சட்டமாக்கங்கள் ஆகியவற்றையும், அவ்வப்போது இந்த இசைவுப் பத்திரத்தில் குறிப்பிடும் மின் வழங்கல் தொடர்பாகப் புதியதாக இயற்றப்படும் சட்டங்களையும் அவற்றில் அவ்வப்போது உருவாக்கப்படும் விதிகள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் ஆணைகள் போன்றவற்றையும் கட்டணவீதங்கள் பற்றிய விதி வகுப்புகளையும் அவ்வப்போது மின் வழங்கல் தொடர்பாக குறிப்பிடப்படும் விதிவகுப்புகள் மற்றும் கட்டுத்திட்டங்களையும் பல்வகைக் கட்டணங்கள் மற்றும் பிற கட்டணங்களுக்கான வீதங்கள் ஆகியவற்றையும் கடைப்பிடிக்க, நுகர்வோர் இதன் மூலம் உறுதியேற்பதோடு மேலும் அவற்றினை இந்த இசைவுப் பத்திரத்தில் பயன்படுத்துவதற்குத் தகராறு ஏதும் எழுப்பமாட்டார் என்பதற்கும் இசைகிறார்.

**5. நுகர்வோர் சாதன வடிவமைப்பும் பேணுதலும்**

உரிமதாரர் மின் தொடர்களிலோ மின்னூட்டிகளிலோ நேரடியாக இணைந்துள்ள நுகர்வோருக்குச் சொந்தமான அனைத்து மின் மாற்றிகள், இணைப்பமைப்புகள் மற்றும் பிற சாதனங்கள், உரிய வடிவமைப்புடன் அமையவேண்டும். அதோடு அவை பொறியாளரின் காரணமுறைமைக்கியைந்த மனநிறைவுக் கேற்ப பேணப்பட வேண்டும். உருகிகளின் வரையளவும் நுகர்வோர் கட்டுப்பாட்டமைப்பில் உள்ள காப்புணர்த்திகளின் அளவமைவும் நுகர்வோரது சுற்றுப்பிரிகலன்களின் முறிப்புத் தாங்குதிறனும் செப்பிய பொறியாளரது ஒப்புதல் பெற்றனவாக அமைதல் வேண்டும்.

**6. உரிமதாரர் விதிக்கும் அனைத்துக் கட்டணங்களையும் செலுத்துவற்கான நுகர்வோரின் பொறுப்பாண்மை**

இந்த இசைவுப் பத்திரம் நடப்புக்கு வரும் தேதியிலிருந்து நுகர்வோர், உரிமதாரருக்கு, பெரும மின் தேவைக் கட்டணம், மின் ஆற்றல் கட்டணம், உபரிக்கட்டணம், மின்னளவிக் கட்டணம் மற்றும் பிற உரிய கட்டணங்கள் ஆகிய ஏதேனுமிருந்தால் அவற்றை அவ்வப்போது அறிவிக்கப்படும் உரிய கட்டண வீதங்களின்படியும் ஒவ்வொரு நுகர்வோரும் நுகர்வோர் வகையும் பயன்படுத்தத் தகுந்த விதி வகுப்புகள் மற்றும் கட்டுத்திட்டங்களின்படியும் செலுத்திட வேண்டியவராவார் என்பதோடு, செலுத்தி வரவும் வேண்டும்.

**7. இசைவுப் பத்திர விதி வகுப்புகளை மாற்றுவதற்கான உரிமதாரரின் உரிமை**

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணயத்தின் நெறிகாட்டுதல்கள், ழுங்குமுறைவிதிகள் சிறப்பு அல்லது பொது நடவடிக்கைகள் ஆகியவை மூலம் அவ்வப்போது விதிக்கப்படும் கட்டணவீதங்கள், பொது மற்றும் பல்வகைக் கட்டணங்கள்,

மேலும் மின்வழங்கலுக்காக உருவாக்கப்படும் விதி முறைகள் மற்றும் வரையறைகள் ஆகியவற்றை உரிமதாரர் மாற்றும் உரிமையுடையவராவார் என்பதற்கு நுகர்வோர் இசைகிறார். குறிப்பாக, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தின் ஒப்புதலுடன் சூழலுக்கேற்ப மின்சாரம் வழங்கலுக்காகச் செலுத்த வேண்டிய கட்டணங்களின் வீதத்தைக் கூட்டுவதற்கு உரிமதாரர் உரிமையுடையவர் என்பதற்கு நுகர்வோர் இசைவு தருகிறார். தேவைக்கேற்றபடி பொருத்தமென உரிமதாரர் கருதும் வகையில் முழு அல்லது பகுதி மின்வெட்டைக் கட்டாயமாக நடைமுறைப்படுத்த அல்லது கட்டுப்படுத்த அவருக்கு ஒருவழி சார்பு அதிகாரம் உண்டு.

**8. மாதச் சிறுமக் கட்டணம்**

ஏதாவதொரு காரணத்தால், அது எவ்வகைக் காரணமானாலும், மின்சாரம் ஏதும் நுகரப்படாவிட்டாலோ அல்லது சிறுமக் கட்டணத்துக்குரிய அளவைவிடக் குறைவாக நுகர்ந்தாலோ அப்போதும் ஒவ்வொரு மாதமும் கட்டணவீதம் மற்றும் மின் வழங்கல் விதித்தொகுப்பில் நிர்ணயித்தபடி மாதச் சிறுமக் கட்டணத்தைக் கட்டிக்கொண்டு வர நுகர்வோர் இசைகிறார். மின்சாரக் கட்டணம் கட்டாததாலோ, மின்திருட்டாலோ அல்லது வேறு விதிவரம்பு மீறல்களாலோ அல்லது வேறு எந்த தகுந்த காரணத்தாலோ நுகர்வோர் ஏதும் மின்சாரம் நுகராமலே உள்ள போதும், மாதச் சிறுமக் கட்டணத்தைச் செலுத்திக் கொண்டுவர வேண்டும்.

**9. உபரிக்கட்டணம்**

உரிமதாரர் கட்டும்படி சொல்லும் கட்டண வீதம், ஆணையம், அவ்வப்போது தரும் ஒப்புதலின் படியான உபரிக்கட்டணம் ஏதாவது கட்டவேண்டி நேர்ந்தால், அதையும் உள்ளடக்கும்.

**10. இசைவுப் பத்திரக் காலம்**

மின் பகிர்மான விதித்தொகுப்பு மற்றும் மின் வழங்கல் விதித்தொகுப்பு ஆகியவற்றில் வகுத்துள்ள விதி வகுப்புகளின்படி ஏதாவதொரு தரப்பால் இசைவுப் பத்திரம் முடிக்கப்படும் வரை இந்த இசைவுப் பத்திரம் நடப்பில் இருக்க வேண்டும்.

பின்வரும் சான்றாளர்களின் முன்னிலையில், உரிமதாரர் சார்பிலும் அவருக்காகவும் செயல்படும், பொறியாளராகிய திரு / திருமதி ...................... அவர்களும், நுகர்வோரின் சார்பிலும் அவருக்காகவும் செயல்படும். திரு / திருமதி ........................ அவர்களும் அவர்களது கையொப்பங்களைப் பதித்ததோடு .................. குழுமத்தின் பொது இலச்சினையும் இங்கே பதிக்கப்பட்டது.

பொறியாளர்
பங்குதாரர் /
மேலாண்மை இயக்குநர்

பின்வருபவர் முன்னிலையில்
மேலுள்ளவர் பெயர் கையொப்பமிடப்பட்டது

1.

2.

பின்வருபவர் முன்னிலையில் ............... என்ற குழுமத்தின் பொது இலச்சினை பதிக்கப்பட்டது

1.

2.